அரசுத்தேர்வுகள் இயக்ககம் சென்னை – 600 006

மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு – மே– 2022

**உயிரி தாவரவியல் விடைக்குறிப்பு**

குறிப்பு :

1. நீலம் மற்றும் கருப்பு மையினால் எழுதப்பட்ட விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. பகுதி – 1ல் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**மொத்த மதிப்பெண்கள் : 35**


**பிரிவு – 1**

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். **8 X 1 = 8**

| TYPE - A | | | TYPE - B | | |
|---|---|---|---|---|---|
| 1 | அ | GAATTC | 1 | இ | அகரோஸ் இழும மின்னாற் பிரிப்பு |
| 2 | இ | மண் | 2 | ஆ | நுண் வித்து |
| 3 | ஆ | லேமியேசி | 3 | இ | தாவரங்கள் மற்றும் மரங்கள் ஆகியவற்றை அகற்றுதல் |
| 4 | இ | தாவரங்கள் மற்றும் மரங்கள் ஆகியவற்றை அகற்றுதல் | 4 | அ | ஒரே ரகத்திற்குள் கலப்பு |
| 5 | இ | அகரோஸ் இழும மின்னாற் பிரிப்பு | 5 | அ | GAATTC |
| 6 | ஆ | நுண் வித்து | 6 | ஆ | லேமியேசி |
| 7 | ஈ | 12:3:1 | 7 | இ | மண் |
| 8 | அ | ஒரே ரகத்திற்குள் கலப்பு | 8 | ஈ | 12:3:1 |

பிரிவு – **2**

எவையேனும் **4** வினாக்களுக்கு விடையளிக்கவும் **4 X 2 = 8**

| | | | |
|---|---|---|---|
| 9. | **மெல்லிடோ ஃ பில்லி**<br>தேனீக்கள் மூலம் நடைபெறும் மகரந்த சேர்க்கை | | 2 |
| 10. | நியூக்கிளியோ டைடு தொடர் வரிசையின் முனை மற்றும் உள்ளாக அமைந்த பாஸ்போடை எஸ்டர் பிணைப்பை துண்டிக்க பயன்படும் நொதி<br>• எக்சோநியூளிக்யேஸ் (அல்லது)<br>Bal 31, எக்சோநியூக்ளியேஸ் III (ஏதேனும் 1 எடுத்துக்காட்டு )<br>• எண்டோநியூக்ளியேஸ் (அல்லது)<br>Hindi II, ECORI,Pvul, Bam H1, Taq1 (ஏதேனும் 1 எடுத்துக்காட்டு ) | 1<br>1 | 2 |
| 11. | மிர்மிகோஃபிலி<br>எறும்புகள் மூலம் நடைபெறும் மகரந்த சேர்க்கை<br>(அல்லது)<br>எறும்புகள், தாவரங்களுக்கு தொந்தரவு அளிக்கும் உயிரினங்களிடமிருந்து காக்கும் காப்பாளராகவும், இதற்குப் பதிலாக தாவரங்கள் எறும்புகளுக்கு உணவு மற்றும் தங்குமிடத்தையும் அளிப்பது. | | 2 |
| 12. | **பிரமிடு :**<br>எண்ணிக்கை பிரமிடு<br> | ½<br>1½ | 2 |
| 13. | மண்வளத்தை மேம்படுத்துவதில் நுண்ணியிரி உட்செலுத்திகளின் பயன்<br>• நைட்ரஜன் நிலைநிறுத்தல்<br>• பாஸ்பேட் கரைத்தல்<br>• செல்லுலோஸ் சிதைத்தல்<br>• உயிரியல் செயல்பாட்டைஅதிகரித்தல்<br>• மண் வளம் அதிகப்படுத்துதல்<br>• தாவர வளர்ச்சி அதிகரித்தல்<br>• சுற்றுச்சூ லுக்கு உகந்தவை<br>• இயற் க வேளாண் இடுபொருள்<br>• வேதிய உரங்களை விட திறன் மிக்கவை மற்றும் விலை மலிவானவை<br>**( ஏதேனும் இரண்டு)** | 2×1=2 | 2 |
| 14. | இயற்கை வேளாண்மை<br>• ஒரு மாற்று வேளாண்மை முறையாகும்.<br>• உயிரியல் இடு பொருட்களை பயன்படுத்தி இயற்கையாக தாவரங்களை / பயிர்களை பயிரிடுதல் . | 1<br>1 | 2 |

பிரிவு – 3

எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளிக்கவும்

**வினா எண்.19 கண்டிப்பாக விடையளிக்கவும்** **3 X 3 = 9**

| | | | |
|---|---|---|---|
| 15. | டபீட்டத்தின் பணிகள்<br><br>1. வளரும் நுண் வித்துகளுக்கு ஊட்டமளிக்கிறது.<br>2. யுபிஷ் உடலத்தின் மூலம் ஸ்போரோபொலனின் உற்பத்தி – மகரந்த சுவர் உருவாக்கம்<br>3. போலன்கிட்டுக்கு வேதிப்பொருட்களை தந்து மகரந்தத்துகளின் பரப்புக்கு கடத்தப்படல்<br>4. சூலகமுடியின் ஒதுக்குதல் வினைக்கான எக்சைன் புரதங்கள் டபீட்ட செல்களில் இருந்து பெறப்படுகின்றன.<br>**(ஏதேனும் மூன்று)** | 3×1=3 | 3 |
| 16. | தவறுதலாக பொருள்படும் , பொருள் உணர்த்தாத சடுதி மாற்றத்திற்கு இடையேயான வேறுபாடு<br><br>**தவறுதலாக பொருள்படும் சடுதிமாற்றம்:** ஒரு அமினோ அமிலத்திற்கான ஒரு மரபுக்குறியினை வேறொரு அமினோ அமிலத்திற்கான மரபுக்குறியாக மாற்றி அமைக்கப்படும் சடுதி மாற்றம்.<br>**பொருள் உணர்த்தாத சடுதி மாற்றம்:** ஒரு அமினோ அமிலத்திற்கான மரபுக்குறியன் முடிவு அல்லது நிறுத்துக்குறியனாக மாற்றம் அடையும் சடுதி மாற்றம்<br><br>(அல்லது)<br><br>**தவறுதலாக பொருள்படும் சடுதிமாற்றம்:** அமினோ அமில வரிசையில் மாற்றம் இருப்பது<br>**பொருள் உணர்த்தாத சடுதி மாற்றம்:** மரபுச்செய்தி பெயர்வினால் முடிவு நிலை மரபுக்குறியனை தோற்றுவிப்பது (UAA,UAG,UGA) | | 3 |
| 17. | **pBR 322**<br><br>• P - பிளாஸ்மிட்<br>• B- R – பொலிவர், ரோட்டிரிகஸ்<br>• **322–** எண்ணிக்கை, அல்லது **322** ஆவது பிளாஸ்மிட் | 1<br>1<br>1 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 18. | **கார்பன் கவரப்படுதல் மற்றும் சேமிப்பு**<br><br>கார்பன் கவரப்படுதல் மற்றும் சேமிப்பு என்பது வளிமண்டலத்தின் கார்பன்– டை– ஆக்சைடை உயிரி தொழில்நுட்பம் மூலமாக கைப்பற்றி ஒரு கிலோ மீட்டர் அல்லது அதற்கு கீழான ஆழத்தில் உள்ள நிலத்தடி பாறைகளுக்கிடையே உட்செலுத்தி சேமிக்கும் முறையாகும். | | 3 |

| 19. | வாழிடம் | செயல் வாழிடம் | | |
|---|---|---|---|---|
| | உயிரினம் (சிற்றினம்) அமைந்திருக்கும் ஒரு குறிப்பிட்ட புவியிடமாகும். | ஒரே சூழ்நிலை தொகுப்பில் உள்ள ஓர் உயிரினம் பெற்றிருக்கும் செயலிடமாகும் | 1 | |
| | ஒத்த வாழிடம் ஒன்றிற்கு மேற்பட்ட உயிரினங்களால் (சிற்றினங்களால்) பகிரந்து கொள்ளப்படுகிறது. | ஒரு செயல் வாழிடத்தில் ஒரே ஒரு சிற்றினம் அமைந்திருக்கும். | 1 | 3 |
| | உயிரினம் புவி வாழிடத் தன்மையை வெளிப்படுத்துகிறது | உயிரினங்கள் காலம் மற்றும் பருவ நிலைக்கு ஏற்ப செயல் வாழிடங்களை மாற்றி அமைத்துக் கொள்ளும். | 1 | |

பிரிவு – **4**

அனைத்து **வினாக்களுக்கும்** விடையளிக்கவும் **2 X 5 = 10**

| | | | |
|---|---|---|---|
| 20. **(அ)** | கருவுறாக்**கனி**<br><br>கருவுறுதல் நடைபெறாமல் கனிபோன்ற அமைப்புகள் சூலகத்தில் இருந்து தோன்றலாம்.<br><br>• உண்மையான விதைகள் காணப்படுவதில்லை. எ.கா: வாழைப்பழம், திராட்சை, பப்பாளி<br>**முக்கியத்துவங்கள்**<br><br>விதையில்லாக் கனிகள் வணிக ரீதியாக அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை.<br>• தோட்டக்கலைத் துறையில் விதையில்லாக் கனிகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.<br>• ஜாம்கள் , ஜெல்லிகள், சாஸ்கள், பழபானங்கள் தயாரிப்பில் விதையில்லாக் கனிகள் பயன்படுத்தப்படுகின்றன.<br>• கருவுறாக் கனிகளில் விதைகள் இல்லாத காரணத்தால் கனியின் பெரும்பகுதி உண்ணக்கூடிய பகுதியாக உள்ளது.<br>(ஏதேனும் மூன்று) | 1<br><br>1<br><br>3×1=3 | 5 |
| 21. | முழுமைபெறா ஓங்குதன்மை மற்றும் இணை ஓங்கு தன்மை வேறுபாடு | | 5 |

| வ. எ | முழுமைபெறா ஓங்குதன்மை | இணை ஓங்கு தன்மை | புள்ளி |
|---|---|---|---|
| 1 | யாதொரு ஓங்கு அல்லீலும் பிரிதொரு ஓங்கு அல்லீலை கட்டுப்படுத்தவில்லை. இருவகை அல்லீல்களும் கூட்டமாக செயல் பட்டு இடைப்பட்ட பாரம்பரியத்தை வெளிப்படுத்துகின்றன. | மாற்றுப் பண்புடைய இரு அல்லீல்களும் ஒரே சமயத்தில் இணைந்து பண்புகளை வெளிப்படுத்துகின்றன. | 2 |
| 2 | முதல் மகவுச் சந்ததியின் கலப்புயிரி பண்பு இரு பெற்றோர்களிலிருந்தும் வேறுபட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. | பெற்றோர்களின் ஒத்த பண்பிணைவிலுள்ள பண்புகளை பெற்றிருப்பதுடன் மாற்றுப் பண்பிணைவிலான புதிய பண்பு தோன்றுவது குறிப்பிடத்தக்கது. | 2 |
| 3 | எ.கா: அந்திமந்தாரை (அ) *மிராபிலிஸ் ஜலாபா* | எ.கா: கமீலியாவில் சிவப்பு மற்றும் வெள்ளை மலர்கள் (அ) கதிர் அரிவாள் வடிவ ஹீமோகுளோபின் (அ) மனிதர்களின் ABO இரத்த வகை | 1 |

**21, அ.** தாவர திசு **வளர்ப்பின் பயன்பாடுகள்** (5×1=5; மொத்தம் 5)

- உடல் கலப்பினமாதல் மூலம் மேம்பட்ட கலப்புயிரிகள் உற்பத்தி
- உறை சூழப்பட்ட கருக்கள் அல்லது செயற்கை விதைகள் தாவரங்களின் உயிரி பன்மத்தைப் பாதுகாத்தல்.
- ஆக்குதிசு மற்றும் தண்டுநுனி வளர்ப்பின் மூலம் நோய் எதிர்ப்பு தாவரங்கள் உற்பத்தி.
- களைக்கொல்லி சகிப்புத் தன்மை, வெப்பச் சகிப்பு தன்மை அழுத்தத்தை (இறுக்கத்தை) எதிர்க்கக்கூடிய தாவரங்களின் உற்பத்தி.
- குறைந்த காலப் பயிர் வன மரச் சிற்றினங்கள் நுண்பெருக்கம் மூலம் உற்பத்தி
- இரண்டாம் நிலை வளர்ச்சிதை மாற்றப் பொருள்கள் உற்பத்தி (மருந்து, அழகு சாதன பொருட்கள் மற்றும் உணவு உற்பத்தி)

**( ஏதேனும் ஐந்து)**

**(அல்லது)**

| | | | |
|---|---|---|---|
| 22 ஆ | நறு**மண**ப் பொருட்**க**ளின் அரசன் அரசி அதன் **பயன்கள் :**<br><br>**நறுமணப் பொருட்களின் அரசன் –** *பைப்பர் நைக்ரம்* அல்லது கருமிளகு<br><br>பய**ன்கள்:**<br><br>• சாஸ்கள் , சூப்கள், குழம்புப்பொடிமற்றும் ஊறுகாய் தயாரிப்பில் மணமூட்டி<br>• மருத்துவத்தில் நறுமணத்தூண்டி, உமிழ்நீர், வயிற்று சுரப்பு, செரிப்பு மருந்து.<br>• மருந்துகளின் உயிர்ப்பு உறிஞ்சுதலை அதிகரிக்கிறது.<br><br>நறு**மன**ப் பொருட்களின் அரசி – *எலிட்டரியா கார்டோமோமம்* அல்லது ஏலக்காய்<br><br>**பயன்கள் :**<br><br>• மிட்டாய் தொழிற்சலைகள் அடுமனை தயாரிப்புகள் மற்றும் புத்துணர்வு பானங்களில் நறுமணமூட்டி<br>• விதைகள் – குழம்பு பொடி , ஊறுகாய், கேக்குகள் தயாரிக்க.<br>• மருத்துவத்தில் தூண்டி, அபானவாயு நீக்கி.<br>• வாய் நறுமணமூட்டியாக பயன்படுகிறது.<br>**(ஏதேனும் மூன்று)** | **1**<br><br><br><br>**1½**<br><br><br><br>**1**<br><br><br><br>**1½** | **5** |